2017 மார்ச் 23]

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொன்முடி அவர்கள், முன்னாள் அமைச்சர், சட்ட நடைமுறைகள் தெரிந்தவர். ஒரு பிரேரணை வந்தால், எப்படிச் செயல்படுத்தப்படும் என்பதையெல்லாம் அவர் ஏற்கெனவே அனுபவபூர்வமாக உணர்ந்தவர். இப்போது சொல்லப்பட்டுள்ள அந்த வனச் சாலையைப் பொறுத்தவரையில், மாவட்ட வன அலுவலர் மூலமாகப் பிரேரணைகள் எங்களுடைய அலுவலகத்திற்கு நேரடியாக வந்தால், எவ்விதத் தாமதமும் இல்லாமல் அதைச் செயல்படுத்துவதற்குரிய சூழ்நிலை, நிதியாதாரத்தைப் பொறுத்து பரிசிலிக்கப்படும் என்ற உறுதியை அன்போடு அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 72, மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

72—

பகுதிநேர நியாய விலைக் கடை

***5796—திரு. சே. கருணாஸ்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாடனை தொகுதி, தேளூர் ஊராட்சி, அரியப்புவயல் கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை தொகுதி, தொண்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் நடத்திவரும் தேளூர் முழுநேர நியாய விலைக் கடை 382 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இக்கடையில் அரியப்புவயலைச் சேர்ந்த 85 குடும்ப அட்டைதாரர்களுக்கும் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கையை மட்டும் தூக்கினால் போதும். ஏன் சத்தம் போடுகிறீர்கள்?*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க குறைந்தபட்சம் 150 குடும்ப அட்டைகளும், பிரித்தபின் தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகளும் இருக்க வேண்டுமென்ற அரசின் நிபந்தனைகள் பூர்த்தியாகாத நிலையில் அரியப்புவயல் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லையென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஆர்.டி. அரசு அவர்கள்.*

டாக்டர் ஆர்.டி. அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யூர் தொகுதிக்குட்பட்ட* Golden Bay Resort *அமைந்துள்ள நாவக்கால், மலையூர் ஆகிய இரண்டு கிராமங்களையும் சேர்த்து 1,230 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. இந்த* Golden Bay Resort *அமைந்துள்ள நாவக்கால் பகுதியில் உள்ள மக்கள் சற்றேறக்குறைய 3 கிலோ மீட்டர் சென்று கூவத்தூர் பஜாரில் அமைந்துள்ள நியாய விலைக் கடைக்கு வர வேண்டியிருக்கின்றது. ஆகவே, நாவக்கால் பகுதியைச் சேர்ந்த மக்களுக்கு தனியே ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்துத் தருவீர்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறத்தாழ 3 கிலோ மீட்டர் தூரம் சென்று மக்கள் ரேஷன் பொருட்களை பொது விநியோகக் கடைகளில் பெற்று வருவதாகவும், அது அந்த மக்களுக்குச் சிரமமாக இருப்பதாகவும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கின்றார்கள். கூட்டுறவுச் சட்ட விதிகளுக்குட்பட்டு அங்கே கடை அமைக்கும்பட்சத்தில், அந்தக் கடைக்கான இடத்தை இலவசமாக அந்தச் சங்கத்திற்குக் கொடுக்க வேண்டும்.*

2017 மார்ச் 23]

எடுத்துச்செல்லுகின்ற பொருட்களுக்கான போக்குவரத்தையும் அந்த ஊர் மக்களே ஏற்றுக்கொள்ள வேண்டும். பிரிக்கப்படும் கடையில் 150 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். 1,200 குடும்ப அட்டைகளுக்குமேல் இருக்கின்றன என்று சொல்லியிருக்கின்றீர்கள். எனவே, உரிய குடும்ப அட்டைகள் இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருப்பதனால், அரசுக் கட்டடமோ அல்லது ஊராட்சிக் கட்டடங்களோ, அதுவும் pucca *ஆக சரியான நல்ல கட்டடமாக இருக்கும்பட்சத்தில், மேற்கண்ட கடையை நிச்சயமாகப் பிரித்துக் கொடுப்பதற்கு, துறையின் மூலமாக நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, நிறைவேற்றித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் நகரப் பகுதியில் 28 ரேஷன் கடைகள் இருந்தாலும், 39 வட்டங்கள் இருக்கின்றன. 5 மற்றும் 6-வது வட்டங்களில் இருக்கின்ற மக்கள் 36-வது வட்டத்திற்கு வருகின்றார்கள். இதுபோன்ற பல குளறுபடிகள் தாம்பரம் போன்று மற்ற பகுதிகளிலும் இருப்பதற்கு வாய்ப்பு இருக்கும். ஆகவே, மக்கள் வசிக்கும் பகுதிக்கு அருகிலே ரேஷன் கடைகள் அமைவதற்கு, அந்தக் கடைகளையெல்லாம் ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மூலமாக ஆண்டொன்றுக்கு 5,500 கோடி ரூபாய் உணவு மானியம் கொடுத்து, குறைந்த விலையில் அந்தப் பகுதியிலே இருக்கின்ற சாதாரண ஏழை, எளிய மக்களுக்கு பொருட்கள் கிடைக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் ஏறத்தாழ 32,695 கடைகள் இன்றைக்கு திறக்கப்பட்டு, நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.*

[2017 மார்ச் 23

முற்பகல் 10—15

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல வார்டுக்கு ஒரு கடை என்பது அல்ல. மக்கள் வசதிக்காக ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் இருந்தால் போதும். சிரமம் இருக்கும்பட்சத்தில் Highways, National Highways *அல்லது ஏதாவது பதட்டம், சமூகப் பிரச்சினை இருக்கும்பட்சத்தில் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையைக் கருத்திற்கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவரே தனக்கு இருக்கும் உரிமையைப் பயன்படுத்தி புதிய கடையை ஏற்பாடு செய்ய வாய்ப்பு உண்டு. எனவே, வார்டுக்கு ஒரு கடை என்பதற்கு சாத்தியக்கூறுகளில்லை. அந்த வகையில் இதுவரை கடைகள் பிரிக்கப்படவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. விருகை V.N. ரவி அவர்கள்.*

திரு. விருகை V.N. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருகம்பாக்கம் தொகுதி 137—வது வட்டத்தில் விசிளி 83 என்ற கடையில் கிட்டத்தட்ட 2,400 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. அந்தத் தொகுதியில் 46 கடைகள் அமைந்துள்ளன. 2 கடைகளில் மட்டும் 2,000 குடும்ப அட்டைகளுக்குமேல் உள்ளன. பொருட்கள் வாங்கும்போது அந்தக்கடைகளில்நெரிசல் அதிகமாக ஏற்படுகிறது என்ற அடிப்படையில், அந்தக் கடைகளிலுள்ள 2,400 குடும்ப அட்டைகளைப் பிரித்து வேறோர் கடையை அமைத்துத் தருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிப் பகுதியாக இருந்தாலும், நகராட்சிப் பகுதியாக இருந்தாலும், நகரப் பகுதியில் குறிப்பாக 1,000 குடும்ப அட்டைகள் இருந்தால் போதுமானது. அதற்கு மேல் இருக்கிற குடும்ப அட்டைகளை மக்கள் வாழுகிற பகுதிகளுக்கு அருகிலேயே உள்ள கடைகளில் பிரித்துக் கொடுப்பதற்கு அரசாங்கம் விதிகளை வகுத்திருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களும்*

2017 மார்ச் 23]

விதிகளை வகுத்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 2,000 குடும்ப அட்டைகளுக்குமேல் இருப்பதாகச் சொல்கிறார்கள். அவ்வாறு 2,000 குடும்ப அட்டைகளுக்கு மேல் இருக்கும்பட்சத்தில் நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்களுக்குச் சொன்னதைப்போல, மாண்புமிகு உறுப்பினர் திரு. விருகை V.N. ரவி அவர்களுக்கும் அரசுக் கட்டடமோ அல்லது தனியார் கட்டடமோ அமையும்பட்சத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று அந்தக் கடைகளைப் பிரித்துக் கொடுப்பதற்கு துறைரீதியாக விரைவான நடவடிக்கை எடுப்பதற்கு ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 73, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

73—

மும்முனை மின்சாரம்

***867—திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதி, எண்ணமங்கலம் மற்றும் மைக்கேல்பாளையம் ஊராட்சிகளில் 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அந்தியூர் தொகுதி, எண்ணமங்கலம் மற்றும் மைக்கேல்பாளையம் ஊராட்சிப் பகுதிகளுக்கு 24 மணி நேரமும் மும்முனை மின்சாரம் வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அந்தப் பகுதி விவசாயம் நிறைந்த